# வெலிகம பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, வெலிகம பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெலிகம பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 ஒக்தோபர் 28 ஆந் திகதிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 1,100,000 பெறுமதியான டெக்ரர் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனமும் வண்டியின் கீழ் கணக்கு

வைக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது கடன்பட்டோர் நிதியேற்பாடு ரூபா 5,095,718 ஆக இருந்ததுடன் அந்த நிதியேற்பாட்டுத் தொகை மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்ததுடன் அதனைக் கணக்கு வைக்கும் போது கடன்பட்டோர் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக வருமானமாக செலவு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் போது கடன்பட்டோர் மீதி ரூபா 5,095,718 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,497,630 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,438,000 ஆனமையால் ரூபா 13,059,630 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் ரூபா 161,359 தொகையான செலவு மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 157,330,090 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,909,519 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,695,759 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமா்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 0.804 | 0.744 | 1.069 |
| (ii) | வாடகை | 2.87 | 2.922 | 0.605 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1.965 | 2.399 | 0.387 |
| (iv) | ஏனைய வருமானம் | 18.905 | 20.164 | 45.749 |

### 2.2.2 நிலுவை வாடகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக அறவிடவேண்டிய ரூபா 1,065,910 தொகையான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிலுவை ஆதனவரி தொடர்பாக சொத்துக்களைத் தடைசெய்யும் நடைமுறை

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 1,065,910 ஆக இருந்தது. இந்த நிலுவையில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்புறுகமுவ மற்றும் மிரிஸ்ஸ அதிகாரப் பிரதேசத்தில் 2079 சொத்துக்களுக்குரிய ரூபா 585,655 தொகையை அறவீடு செய்வதற்கு மூன்று சொத்துக்களைத் தடை செய்யும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அத்தொகையில் ரூபா 172,810 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 1807/2 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுமக்கள் பிரதிநிதியாக கையளிக்கப்பட்ட செயற்பாடுகள்/ சபையினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பிரயாணச் செலவுப் படிகளைச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு எவ்வித செயற்பாடுகளும் கையளிக்கப்படாது உறுப்பினர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 660,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஒ) பிரிவின் பிரகாரம் விழாச் செலவினங்களுக்காக உரிய அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டில் விழாச் செலவினங்களுக்காக ரூபா 96,310 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010/2011 இன் மாகாண குறித்த மானியத்தின் கீழ் கம்புறுகமுவ எப்பிட்டமுல்ல ஜினதாச மாவத்தை கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 600,000 பெறுமதியான உடன்படிக்கையில் 2010 ஆகஸ்ட் 18 ஆந் திகதி விவசாயச் சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2010 திசெம்பர் 01 ஆந் திகதி செய்யப்பட்ட வேலை அறிக்கையின் பிரகாரம் ரூபா 585,679 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் 26 ஆந் திகதியளவில் வீதியின் கொங்கிரீட் முழுமையாகக் கழன்றிருந்தமையினால் செய்யப்பட்ட மொத்தச் செலவினமும் பயனற்றதாகியிருந்தது.

(ஆ) கம்புறுகமுவ எப்பிட்டமுல்ல வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக 2010 இன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2010 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 786,679 தொகை பெறுமதியில் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2011 சனவரி 05 ஆந் திகதி செய்யப்பட்ட வேலை அறிக்கையின் மூலம் ரூபா 780,831 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

2013 ஆகஸ்ட் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரிசோதனையின் போது இந்த வீதியின் கொங்கிரீட் படைகள் முழுமையாகக் கழன்றிருந்தமையினால் செய்யப்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது.

## 2.5 நிதங்கல தகனக்கூட நிர்மாணம்

தலைவரின் கோரிக்கையின் பிரகாரம் நிதங்கல தகனக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனத்தினால் ரூபா 7,380,000 தொகை பிரதேச சபைக்கு 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தகனக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு முறைமை பின்பற்றப்படாதிருந்ததுடன் சபையின் அங்கீகாரமின்றி தலைவரினால் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு நிர்மாணச் செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூபா 5,777,482 தொகையில் சபை 2007 ஏப்ரல் 05 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரினால் ரூபா 2,500,000 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தக்காரரினால் இந்த நிர்மாணங்கள் உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமையினால் 2009 ஏப்ரல் 05 ஆந் திகதி தொடக்கம் இந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் கேள்விப் பிணைப்பொறுப்பின் செல்லுபடிக் காலம் 2008 ஏப்ரல் 03 ஆந் திகதி முடிவடைந்திருந்தமையினால் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை மீள அறவிடுவதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தலைவரின் கோரிக்கையின் பிரகாரம் எஞ்சிய தொகையான ரூபா 4,360,000 மீளவும் உள்ளூராட்சி ஆணையாளரினால் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அத்தொகை தகனக்கூடத்தின் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படாமல் சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய களப்பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் தகனக்கூடத்தின் கூம்பு முழுமையாக உடைந்துவிழுந்து செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மை

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுச் செயலாளரின் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளை ஔிரச் செய்தல் தொடர்பான பீஈ/01/01/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரப்பிரதேசத்தில் வீதி விளக்குகளை பராமரித்தலுக்கான செலவினங்களுக்கான நிதியை மீளளிப்புச் செய்து கொள்வதற்காக கோரப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,344,524 தொகையான பராமரிப்புச் செலவினத்தை மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்